III.—PERSONAL EXPLANATION BY SRI A. RATNAM *RE* HIS WALK OUT ON 6TH MARCH 1954.

* SRI A. RATNAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற சனிக்கிழமை (6—3—54) அன்று நான் இந்தச் சட்டசபையை விட்டு வெளியேறினதன் காரணத்தைக் குறித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டசபையிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் சட்ட சபையின் கௌரவத்தையும், சட்டசபைக்கு தலைமை வகிக்கும் சபாநாயகர் அவர்களின் கௌரவத்தையும் காப்பாற்றுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அதுபோலவே, சட்டசபையின் கௌரவத்தையும், சபாநாயகர் அவர்களின் கௌரவத்தையும் காப்பாற்றுவதில் நான் இம்மியளவும் பின்வாங்குபவனல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 11–02 a.m.

" இந்த வரவு செலவுத் திட்டத்தின் பொது விவாதத்திற்காக ஒதுக்கப் பட்டிருந்த ஐந்து நாட்களில் தாழ்த்தப்பட்டோர் சம்மேளன (Schedule Castes Federation) கட்சிக்கு அவகாசம் கொடுக்கப்படவில்லையென்ற காரணத்திற்காகத்தான் நான் அன்று சபையை விட்டு வெளியேறினேன். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு திட்டம் உண்டு; ஒவ்வொரு நோக்கம் உண்டு. அவர்கள் நடைமுறையில் செயலாற்றவேண்டிய காரியங்கள் இருக்கின்றன. மக்களுடைய குறைகளை ஆட்சி மன்றங்களிலே, அதாவது சட்டசபையிலே, ஆட்சியாளர்களுக்கு எடுத்துக்கூறவேண்டியிருக்கிறது. அதனைச் செய்வதுதான் ஒவ்வொரு கட்சியின் கடமையாகும். அதைப்போலவே, அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் ஒவ்வொரு ராஜ்யத்திலேயும் இயங்கிவருகிறது. சென்ற தேர்தலில் 42 ஸ்தானங்களுக்குப் போட்டியிட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் பூனா ஒப்பந்தத்தின் காரணமாக நான்கு அங்கத்தினர்களைத்தான் இந்த சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கவேண்டிய அவகாசம் ஏற்பட்டது. அந்த அளவுக்கு குறுகிய ஒரு சில மெம்பர்கள் இங்கு இருந்தாலும், பெரு நோக்கமும், பரந்த கொள்கையுமுடைய ஒரு கட்சியின் சார்பிலே, அதிலும் இந்த ராஜ்யத்தின் மூன்றிலொரு பங்கு ஜனத்தொகையுள்ள, அதாவது ஒரு கோடிவரை ஜனத்தொகையுள்ள தாழ்த்தப்பட்டவர்களுடைய சார்பிலே பரிந்து பேசுவதற்கும், அவர்களுடைய நிலைமையை எடுத்துச் சொல்லுவதற்கும் . . ."

MR. SPEAKER :—" மற்ற ஹரிஜன எம்.எல்.ஏக்களும் இங்கே இருக்கிறார்கள்."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" On a point of order, are we in order in allotting time for justifying the walk out ? "

MR. SPEAKER :—" I don't know what he is going to speak. I want to hear him till the end. "

* SRI A. RATNAM :—" அன்று நான் வெளியேறியதன் நோக்கம், சட்டசபையை அவமதிப்பதற்காகவோ அல்லது சபாநாயகரை அவமதிப்பதற்காகவோ அல்ல என்பதைக் குறிப்பிடவேண்டும் என்பதற்காகத்தான் இப்பொழுது நான் பேச விரும்புகிறேன். நான் பேசவேண்டிய விஷயங்களை சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்."

MR. SPEAKER :—" நானும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நான் இப்பொழுது தமிழிலேயே பேச விரும்புகின்றேன். ஷெட்யூல்ட் வகுப்புச் சம்மேளனக் (Schedule Castes Federation) கட்சியினர் பேசுவதற்கு நான் அவகாசம் கொடுக்கவில்லை என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அவர் அப்படிச் சொல்வது தவறு. இந்தச் சபையிலே (S.C.F.)-யைச் சேர்ந்தவர் ஒருவரே இருக்கிறார். யானைப் பெட்டியில் வோட்டு பெற்று வந்த ஸ்ரீ தசரதன் தான் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதன்படியே அவருக்கு அவகாசம் கொடுக்கப்பட்டது,

[Mr. Speaker] [12th March 1954

" கனம் அங்கத்தினர் திரு. ரத்னம் அவர்கள் திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி அவர்களைத் தலைவராகக்கொண்ட தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியிலிருந்து வந்தவர். அவர் பேசவேண்டுமென்று முதலிலேயே என்னைக்கேட்டிருந்தால், அவருக்கு அவகாசம் கொடுத்திருந்திருப்பேன் என்பதில் சந்தேகமேயில்லை. இது என் வீடல்ல ; இது பொது மக்களுடைய பிரதிநிதிகளடங்கிய சட்டசபையாகும். ஆனால், கம்யூனிஸ்ட் கட்சிபோன்ற மற்ற எந்தக் கட்சியிலும் உள்ள அங்கத்தினர்கள் ஹரிஜனங்களுக்குப் பிரதிநிதிகள் அல்ல என்று அவர் சொல்லுவது தவறு. எல்லாக் கட்சியிலும் ஹரிஜனங்களுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். S.C.F.-யைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்குத்தான் அவகாசம் கொடுக்கவேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்வது தவறு என்று நான் சொல்லுகிறேன். ஒரே ஒரு S.C.F. அங்கத்தினராகிய திரு. தசரதன் தான் பேசவேண்டுமென்று என்னைக்கேட்டார். நான் அனுமதித்தேன். திரு. ரத்னம் அவர்கள் அந்த நாளுக்கு முன்பே என்னைக் கேட்டிருந்தால் நான் அவரைப் பேச அனுமதித்திருப்பேன். 6—3—54-ந்தேதியன்று—அதாவது பட்ஜட் பொது விவாதத்தின் கடைசி நாள் அன்று—தான் என்னை அவர் கேட்டார்.

" 1, 2-ந் தேதிகளில் பேசவேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்ட ஐம்பது அங்கத்தினர்களில் எல்லோருக்கும் நான் பேச அவகாசம் கொடுக்கவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அப்படிக் கேட்டவர்களில் இரண்டு, மூன்று பேர்கள் ஹரிஜன அங்கத்தினர்களாகவும், மற்றவர்கள் ஜாதி இந்துக்களைச் சேர்ந்த அங்கத்தினர்களாகவும் இருந்தார்கள். ஆகையினால், பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்ட எல்லோருக்கும் பேச அவகாசம் கொடுப்பதென்பது முடியாத காரியம்.

" பட்ஜெட் கூட்டம் தொடங்குவதற்கு முன்பே, அதாவது 1953-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே என்னுடைய அறையில் சட்டசபையிலுள்ள கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து ஒரு கூட்டம் போட்டு, பட்ஜெட் பொது விவாதத்திற்கு 5 நாட்கள் ஒதுக்கலாம் என்றும், 'டிமாண்டு' கள் விவாதத்திற்கு 13 நாட்கள் ஒதுக்கலாம் என்றும் நிர்ணயித்தோம். ஆனால், பொது விவாதத்திற்கு 5 நாட்கள் ஒதுக்கியிருப்பது போதாது என்று கட்சித் தலைவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆகவே, ஒவ்வொரு நாளும் கேள்வி நேரத்திற்கென்று ஒரு மணி நேரம் போய்விடுவதனால், வழக்கமாக 11-மணிக்கு ஆரம்பிக்கப்படவேண்டிய கூட்டத்தை காலை 10-மணிக்கு ஆரம்பிக்கவும் ஏற்பாடு செய்தேன்.

" வியாழன் அன்று கட்சிக் கொறடாக்கள் (Party whips) தங்கள் தங்கள் கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களில் யார் யார் பேசவேண்டுமென்று விரும்புகின்றார்கள் என்கிற ஒரு பட்டியலை (list) என்னிடம் கொடுத்தார்கள். அனேக அங்கத்தினர்கள் பேசவேண்டுமென்று சொன்னதின்பேரில் night sitting வைத்தாவது அவகாசம் அளிக்கவேண்டுமென்று நினைத்தேன். அப்படி night sitting வைப்பதற்கு முன்பாக தலைவர்களுடைய சௌகரியத்தையும் கேட்டுத் தெரிந்துகொண்டபின்தான் வைத்தேனே தவிர, அங்கத்தினர்களின் சௌகரியத்தை அனுசரிக்காமல் செய்யவில்லை.

" திரு. ரத்னம் அவர்களுக்கு அவகாசம் கொடுக்கக்கூடாது என்பது என்னுடைய உத்தேசமல்ல. அவருக்கும் கொடுத்திருப்பேன். ஆனால், அவர் சனிக்கிழமையன்று தான் என்னைக் கேட்டார். முன்பே கேட்டிருந்தால், அவருக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருப்பேன். அவருக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று சொல்வது தவறு.

" மலபாரிலிருந்தும் ஹரிஜன அங்கத்தினர்கள் என்னைக் கேட்டார்கள் ஸ்ரீ ஈ. டி. குஞ்சன் அவர்கள் ஐந்து நாட்களாக என்னைக் கேட்டும் அவருக்கு நான் அவகாசம் கொடுக்க முடியவில்லை. மலபார் ஜில்லாவில் untouchability, unseeability, unapproachability இவைகளையெல்லாம் பார்க்கின்றோம். அப்படியிருந்தும் அவர்களுக்குகொடுக்க முடியவில்லை. கனம்

அங்கத்தினர் ஸ்ரீ திருமூர்த்தி அவர்கள் கூட ஐந்து நாட்களாக என்னைக் கேட்டார், அவருக்கும் கொடுக்கவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சியிலுள்ள ஹரிஜன அங்கத்தினர்களுக்கும் கொடுக்கவில்லை ; காங்கிரஸ் கட்சியிலுள்ள அநேக ஹரிஜன அங்கத்தினர்களுக்கும் கொடுக்க முடியவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். The matter is closed now. Hon. the Finance Minister."

SRI A. RATNAM :—" You have accused me Sir. I have to give my explanation."

MR. SPEAKER :—" The matter is closed. The hon. Member should resume his seat. I will call the hon. Member afterwards when he can say whatever he wants to say. (The hon. Member Sri Ratnam was seen still standing.) The hon. Member should first obey the Chair and resume his seat. I will call him afterwards."

SRI A. RATNAM :—" I want to make a personal explanation."

MR. SPEAKER :—" Order, order. Let the hon. Member first resume his seat. After the Hon. the Finance Minister moves his motion, I will again allow the hon. Member to speak. Now the Hon. the Minister for Finance may move the motion."

IV.—GOVERNMENT MOTION.

MOTION UNDER RULE 22 (3) OF THE ASSEMBLY RULES.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, I move—

' *That the demands for grants for the year* 1954–55 *be taken up in the order set out below* :—

1. *I. Land Revenue Department.*
2. *II. Excise Department.*
3. *IV. Forest Department.*
4. *VII. General Sales Tax and other Taxes and Duties Administration.*
5. *IX. Head of State, Ministers and Headquarters Staff.*
6. *XI. District Administration and Miscellaneous.*
7. *XII. Administration of Justice.*
8. *XIII. Jails.*
9. *XVII. Public Health.*
10. *XIV. Police.*
11. *XVIII. Agriculture and Fisheries.*
12. *XX. Co-operation.*
13. *VIII. Irrigation.*
14. *XXII. Harijan Uplift.*
15. *XXI. Industries and Cinchona.*
16. *XXVII. Electricity.*
17. *XXIII. Labour including Factories.*
18. *XXXII. Community Development Projects.*

[Sri C. Subramaniam] [12th March 1954

19. *XXXIII. Road Transport Schemes—Working Expenses.*
20. *XLI. Capital Outlay on Schemes of State Trading.*
21. *XLII. Loans and Advances by the State Government.*
22. *XV. Education.'*

and that the rest of the Demands for Grants be taken up in the order in which they appear in the Notice, dated 26th February 1954.''

MR. SPEAKER :—'' I think there will be no objection to this motion moved by the Hon. Minister, as the same has been moved with the consent of the leaders of parties.''

The motion was put and carried.

MR. SPEAKER :—'' Regarding the time allotted to the Hon. Ministers for replying to the Demands, I must tell the House, that I have allotted 10 minutes for the Hon. Ministers if the time allotted for a particular Demand is one hour, 15 minutes if the Demand is for two hours, 20 minutes if the Demand is for three hours and 30 minutes if the Demand is for four hours or more.''

SRI K. VINAYAKAM :—'' How much time will be allowed for those hon. Members who have moved cut motions? ''

MR. SPEAKER :—'' The time-limit for hon. Members will uniformly be 10 minutes.''

SRI V. R. NAGARAJAN :—'' If the time allotted for a particular Demand is 4 hours, is it not necessary that the mover of a cut motion gets more time? ''

MR. SPEAKER :—'' Hon. Members, whether they move cut motions, or support cut motions or simply want to speak, will uniformly be given 10 minutes. Now, the hon. Member Sri Ratnam may make his personal explanation.''

III.—PERSONAL EXPLANATION BY SRI A. RATNAM *RE* HIS WALK OUT ON 6TH MARCH 1954—*cont.*

11-12 a.m. * SRI A. RATNAM :—'' நான் எதற்காக வெளியேறினேன் என்பதை விளக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் கனம் சபாநாயகர் எல்லோர் முன்னிலையிலும் இவ்விதமாக குறுக்கிட்டு அடக்குவது நல்லதல்ல என்று சொல்ல விரும்புகிறேன். இதன் விவரம் என்னுடைய Personal explanation-ல் ஆரம்பத்தில் இருக்கிறது. ஷெட்யூல் காஸ்ட் பெடரேஷன் மூலமாக, யானைப்பெட்டி சின்னம் கொண்ட பெட்டியின் பெயரில் வந்தவர் ஒருவர்தான் என்று சொன்ன கனம் சபாநாயகருக்கு நான் விளக்க விரும்புகிறேன்.''

MR. SPEAKER :—'' ஒருவர்தான் ஷெட்யூல் காஸ்ட் பெடரேஷன் மூலமாக வந்தவர். ஒவ்வொருவரும் எப்படி வந்தார்கள், என் வந்தார்கள் என்பதைப்பற்றி தெரிந்துகொள்ள எனக்குக் கவலை இல்லை.''

12th March 1954]

* **Sri A. RATNAM** :—" எது எப்படி வாதிக்கப்பட்டாலும், நான் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிரதிநிதியாகவும், ஷெட்யூல்ட் காஸ்ட் பெடரேஷனுக்கு தலைவனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். எனக்கு சட்டசபைக் கட்சி கூட்டங்களுக்கும் மற்ற கூட்டங்களுக்கும் கட்சித் தலைவன் என்ற முறையில் அழைப்பு அனுப்பப்பட்டு வந்திருக்கிறது. நான் இந்தக் கட்சியில் பல ஆண்டுகளாக இருப்பவன் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நலியுற்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் நிலைமையை பட்ஜெட் விவாதத்தில் விளக்குவதற்காக அவகாசம் கேட்டதற்கு, என்னை ஒரு கட்சித் தலைவன் என்றும் பொருட்படுத்தாது அடக்கியிருக்கிறார்கள். கனம் சபாநாயகர் அவர்கள் சொல்லியதுபோல் ஒரு நாளாவது ஸ்ரீ தசரதன் விவாதத்தில் கலந்துகொண்டிருக்கிறாரா ? அப்படிப் பேசியிருந்தால் அரசாங்க புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்குமே. இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதன் பொருளென்ன? ஒரு விஷயத்தைப்பற்றி விளக்குவதற்காக எழுந்திருக்கும் அங்கத்தினரை இவ்விதமாக அடக்குவது நல்லதல்ல என்று சொல்ல விரும்புகிறேன்."

Mr. SPEAKER :—" Order, order. The hon. Member should resume his seat. If he goes on in that strain—perhaps he does not know much of parliamentary procedure—I will have to name him. It is not my intention to take action against the hon. Member now as he is new. But I must tell him that he is going beyond his limits."

Sri M. KALYANASUNDRAM :—" Sir, may I submit that a personal discussion between the hon. Member and the Hon. Speaker in your chamber will be better? Let us close the matter where it stands now."

Mr. SPEAKER :—" The hon. Member has made the position worse now."

Sri M. KALYANASUNDARAM :—" I appeal to the hon. Member through you, Sir, not to press the matter further. Let him talk this matter personally with you in your chamber."

The Hon. Sri C. RAJAGOPALACHARI :—" May I ask the acting Leader of the Opposition who has made the present observation, to exert his influence a little more with the hon. Member who has obviously made the position worse? "

Sri M. KALYANASUNDRAM :—" Yes, Sir, I will be quite willing to do that, but I am not sure whether my advice will be of any effect at this stage. I request you to give me some time to go and talk to him. Mr. Speaker, you have yourself been pleased to say that he is a new Member. So, kindly allow us some time."

The Hon. Sri C. RAJAGOPALACHARI :—" I agree that even the acting Leader of the Opposition has no influence over the hon. Member. I can imagine that and I can also understand that. But, if the acting Leader of the Opposition joined with the rest and said that the hon. Member's conduct was not good, it would have had some influence on the hon. Member. He could have done that instead of appealing to the Hon. Speaker to receive the hon. Member in his room in addition to the reception given to him here."

[12th March 1954

SRI M. KALYANASUNDRAM :—" It is not as if I appreciate or support all that the hon. Member has said. I do not have any desire to support what all he has said."

THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" You must condemn him."

SRI M. KALYANASUNDARAM :—" The hon. the Chief Minister cannot suggest to me what I should do based on his feeling. At the same time, I wish to state that every Member is bound to respect the Chair. We are certainly bound to respect the Chair. From this point of view, I do not appreciate the statements made by the hon. Member."

MR. SPEAKER :—" ஸ்ரீ ரத்தினம் அவர்கள் சென்ற சனிக்கிழமை 6-ம் தேதியன்று பேசியதாவது : 5 நாட்கள் பட்ஜெட் மீது விவாதம் நடக்கிறது. ஆனால் நாட்டில் நலிவுற்று மிகவும் கேவலமாகக் கருதப்பட்டு வருகிற தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதியும் ஷெட்யூல்டு காஸ்ட் வகுப்பினர் சம்மேளனத்தின் அங்கத்தினருமான எனக்கு இந்த விவாதத்தில் பேசுவதற்கு அவகாசம் அளிக்கப்படவில்லை. கனம் சபாநாயகர் அவர்களை நான் பலமுறைக் கேட்டுக்கொண்டிருந்த போதிலும் பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

" நீங்கள் மேற்குறித்த விஷயங்களைச் சொன்னது சரியா என்று கேட்கிறேன்.

" He has asked, ' Is it just? ' He has suggested that I have not acted justly. That is what is meant by his statement."

SRI M. KALYANASUNDRAM :—" The hon. Member wants to make a statement to the Chair. He may be given a chance, Sir."

MR. SPEAKER :—" I have no objection. Let him make his statement."

SRI A. RATNAM :—" கனம் சபாநாயகர் அவர்களே நான் இன்று இந்தச் சபையிலே நடந்து கொண்ட முறையைப் பற்றி நான் மிகமிக வருத்தப் படுகிறேன்."

MR. SPEAKER :—" The matter is closed now."

V.—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1954–55.

DEMAND I—LAND REVENUE DEPARTMENT.

11-20 a.m. THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

' *That the Government be granted a sum not exceeding Rs. 76,42,100 under Demand I—Land Revenue Department* '."

MR. SPEAKER :—" Motion moved—

' That the Government be granted a sum not exceeding Rs. 76,42,100 under Demand I—Land Revenue Department.'

I have allotted two hours for this Demand."